

தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

| கதிர் 46 | பாரிப்பு 9 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஆகஸ்ட 2015 |
|---|---|---|---|

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மேதகு **A.P.J.** அப்துல் கலாம் அவர்களின் மறைவிற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

# நெஞ்சில் நிறைந்த நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள்






**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 9 (2014 - 2015)

# தொடரும்

## நம் பயணம் .......



### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

இந்திய திருநாட்டின் இரண்டாவது மகாத்மா உலக வல்லரசு நாடுகளின் பார்வையை இந்தியாவை நோக்கி திரும்பச் செய்த முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மேதகு A.P.J.அப்துல் கலாம் அவர்களின் மறைவுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

பாரம்பரியம் மிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கம் நூற்றாண்டை கடந்த ஒரு சங்கம் என்கின்ற பெருமையை விட சங்க நூற்றாண்டு விழாவில் அப்துல் கலாம் என்கின்ற உன்னத மனிதர் கலந்துக்கொண்டார் என்கின்ற பெருமைதான் பெரியது. அண்ணல் அப்துல் கலாம் அவர்களின் மறைவிற்கு உலக இந்தியர்கள் அனைவருமே கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள்.

நூற்றாண்டுவிழாவில் கலந்து கொண்ட பல பேர் தொலைபேசியிலும், நேரிலும் தொடர்பு கொண்டு அப்துல் கலாம் என்ற உயரிய மனிதரை நேரில் சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். நூற்றாண்டு விழாவில் கலந்துக்கொள்ளாதவர்கள் கூட நூற்றாண்டு விழாவை மேதகு அப்துல் கலாம் அவர்களை அழைத்து நடத்தியமைக்கு பாராட்டு தெரிவித்தார்கள்.

மேதகு A.P.J. அப்துல் கலாம் அவர்கள் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டதால் தமிழ்நாடு பொறியியல் சங்கம் இந்திய வரலாற்றில் இடம் பெற்று விட்டது. இந்த நிகழ்வு ஒரு வரலாற்று சாதனையாகும்.

மேதகு அப்துல் கலாம் அவர்களின் மறைவு இந்தியாவிற்கு ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரார்த்திக்கிறது.

**பட்டயப் பொறியாளர்களுக்காக குரல் கொடுத்த**
**அண்ணல் அப்துல் கலாம் அவர்கள்**

" I don't want any caste system.....
engineers, diploma holders............. O.K.
Engineers are Engineers and
I am also a diploma holder"............

அண்ணல் அப்துல் கலாம் அவர்கள் 05.09.2014 அன்று தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் மேற்கண்டவாறு பேசினார்.

பொதுப்பணித்துறையில் பட்டயப் பொறியாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை என்னிடம் கேட்டு தெரிந்துக் கொண்ட மேதகு A.P.J.அப்துல் கலாம் அவர்கள் அது தவறு என்று சுட்டிக் காட்டி மேற்கண்டவாறு பேசினார்.

ஆனால் பொறியாளர் சங்கத்தில், சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற உள்ளது. வழக்கம் போல் இரண்டு அணிகளும் பட்டயப் பொறியாளர்களையும், பகுதிநேர பட்டம் பயின்றவர்களையும் அழித்து விடுவதாக வாக்குறுதி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்போதும் இல்லாத அளவிற்கு மிக வெறித்தனமாக பட்டய இனத்தை அழித்து விடுவதாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். சக அரசு ஊழியர்களை ஒழிக்கிறோம் என்று சொல்லி சங்கம் நடத்துபவர்கள் பொறியாளர் சங்கத்தை சார்ந்தவர்களாகத்தான் இருக்க முடியும். ஒரு இனத்தை அழிக்க பாடுபடும் அநாகரீக அராஜகம் பொதுப்பணித்துறையில்தான் நடந்துக் கொண்டிருக்கிறது. இந்த நல்லவர்கள் தான் நாளை தலைமைப்பொறியாளர்களாக வர இருக்கிறார்கள். இந்த ராஜபக்ஷேக்கள் தான் நடுநிலைமையாக செயல்படவேண்டிய தலைமைப்பொறியாளர் (பொது) பதவிக்கு வரப்போகிறவர்கள். நடுநிலைமையற்ற நிர்வாகத்தை தரப்போகிறார்கள். துறையை உயர்த்துவோம், பொறியாளர்களின் தன்மானத்தை காக்க பாடுபடுவோம் என்றெல்லாம் சொல்லாமல் பட்டயப் பொறியாளர்களையும், பகுதி நேரப் பட்டம் பயின்றவர்களையும் ஒழித்து கட்டுவோம் என்று வாக்குறுதி அளிக்கிறார்கள். பட்டயப் பொறியாளர்களை ஒழித்து விடுவதால் எல்லாம் சரியாகிவிடுமா?

பொதுப்பணித்துறை தேய்ந்துக் கொண்டே வருகிறது. அதை சரி செய்ய யாரும் முன் வரவில்லை. அதிகாரபலம், பணபலம் இவற்றைக் கொண்டு ஒரு இனத்தை அழிக்க முயற்சிகள் மேற்கொள்வதை பெருமையாக கொள்ளும் அநாகரீகத்தை என்னவென்று சொல்வது? இவர்கள் எப்போது திருந்துவார்கள்?

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

## ABSTRACT

Pay Revision - Tamil Nadu Revised Scales of Pay Rules, 2009 - Request for further revision of scale of pay - Deferred - Orders - Issued.

---

## FINANCE (CMPC) DEPARTMENT

**G.O.(Ms.) No.200** **Dated: 10.07.2015.**
**Aani, 25, 27**
**Thiruvalluvar Aandu 2046**

**Read**

1. Government Letter No. 14100/Pay Cell/1996-1, dated:07-11-1996.
2. G.O.Ms.No.234, Finance (Pay Cell) Department, Dated, 1-6-2009.
3. G.O.Ms.No.444, Finance (Pay Cell) Department, dated:09-09-2009.
4. G.O.Ms.No.123, Finance (Pay Cell) Department, dated: 10-4-2012.

-------

**ORDER:**

In the Government Order second read above, orders were issued revising the scales of pay of employees/ teachers on a "pay scale to pay scale basis "notionally with effect from 1-1-2006 with monetary benefit from 1-1-2007 based on the recommendations of the Official Committee, Subsequently, One Man Commission was constituted to examine the anomailies, consequyent on the implementation of the revised scales of pay and more specifically to examine the representation of the teachers associations to extend Central Scales of pay, The recommendation of the One Man Commission was accepted by Government in toto and 87 Government Orders were issued department -wise revising the pay scales ofriouscategories.

2) As per the orders of the Hon'ble High Court, dated-08.03.2012 in W.P.No.7006 of 2011, the Government constituted "Pay Grievance Redressal Cell" (PGRC) to examine the representations received from the employees associations/ Heads of Department / individual employees including the aggrieved petitioners in Writ Petitions filed challenging the G.O.Ms.No.71, Finance (pay Cell) Department, dated 26-02-2011. An elaborate exercise was done by the PGRC on 4376 representations received from various associations / individuals / Writ Petitioners and heard their grievances in person before arriving at conclusions.Based on the recommendations of the PGRC, 89 Government Orders were issued benefitting around two lakhs employees.

3) In spite of further revision in pay scales as indicated above, several court cases have been filed by individual employees/associations, seeking further

pay revision. Further a number of request are being made by individual employees / associations and information on present their request are sought under Right to Information Act 2005, which has resulted in voluminous work in Finance Department. Further, nine years has already lapsed since the implementation of revised pay scales and therefore requests for further pay revisions cannot be entertained at this juncture with retrospective effect.

4) The Government after careful consideration has decided to examine the anomalies / requests for further pay revision at the time of general pay revision by constituting Commission / Committee. Accordingly, Government direct that the representations received from the associations / individual employees requesting for further revision of Pay Band / Grade Pay be deferred till a Commission / Committee is constituted for general pay revision. The Principal Secretaries / Secretaries to Government shall issue necessary instructions in this regard to the Heads of Department under their administrative control for strice adherence.

(BY ORDER OF THE GOVERNOR)

K.SHANMUGAM,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

**சென்னை பொறியியல் இல்லத்தில் முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மேதகு A.P.J. அப்துல் கலாம் அவர்களின் மறைவிற்கு அஞ்சலி**



# இயங்கும் உலகம்

## சேலம் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 05.07.2015 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 03.30 மணியளவில் சேலம் கிளை கட்டிடத்தில் இறை வணக்கத்துடன் துவங்கியது. சேலம் கிளையின் தலைவர் பொறி.பி.சண்முகம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தினார். கூட்டத்தில் பொது செயலாளர் பொறி.த.முருகேசன் அவர்களும் மேற்கு மண்டலச்செயலாளர் பொறி.சி.பன்னீர்செல்வம் அவர்களும் சிறப்பு அழைப்பாளராக மையச்சங்கம் சார்பில் கலந்து கொண்டனர். பொறி.இரா.வேதநாராயணன் கிளையின் செயலாளர் அவர்கள் வரவேற்புரை வாசித்தபின் மறைந்த பெரியோர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பொறி.பி.சண்முகம் கிளைத் தலைவர் அவர்கள் தலைமையுரையாற்றினார். பொறி.எஸ்.பாண்டியன் கிளையின் பொருளாளர் அவர்கள் மூலம் கிளைச்சங்க வரவு செலவு கணக்குகள் வாசித்து ஒப்புதல் பெறப்பட்டது. தொடர்ந்து பொறி.இரா.வேதநாராயணன் கிளைச் செயலாளர் அவர்கள் கிளையின் செயல்பாடுகள், உறுப்பினர் அனைவரும் கூட்டத்திற்கு தவறாமல் வருகை தரவேண்டியும் உரையாற்றினார். மேற்கு மண்டலச் செயலாளர் பொறி.சி.பன்னீர்செல்வம் அவர்களின் உரைக்குப்பின் பொது செயலாளர் அவர்கள் மையசங்க செயல்பாடுகள் இளம்பொறியாளர் பணிவரன்முறை, உதவிப்பொறியாளர் பதவி பெயர்மாற்றம், உதவிப்பொறியாளர் பணிவரன்முறை, பணிநீக்கம் செய்யப்பட்ட இளம்பொறியாளர் பிழை பொறுத்தல் கோப்பின் தற்போதைய நிலை, மின்பொறியாளர் பதவி உயர்வு, பணி ஆய்வாளர்களுக்கு பட்டயம் தேர்ச்சிப்பெற்றிருப்பின் தொ.நு.உ/ வரைவாளர் பதவி உயர்வு, தொ.நு.உ லிருந்து இளம்பொறியாளர் பதவி உயர்வு மற்றும் சென்னை தமிழ்நாடு பொறியியல் சங்க இல்லம் கட்டிடம் நவீனப்படுத்துதல் சம்பந்தமாக விரிவாக பேசினார்.

தொடர்ந்து உறுப்பினர்கள் பி.பாலசுப்ரமணியம் இளம்பொறியாளர், பொறி.சக்திவேல், உ.பொ(மின்), பொறி.ஆர்.வெங்கடாஜலம் உசெபொ, ஆ.இராசேந்திரன் உபொ, பொறி.அருளரசு ஆகிய உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு பொது செயலாளர் விளக்கம் அளித்தார். அதனைத் தொடர்ந்து 2015-16ம் ஆண்டுக்கான் கிளைச்சங்க நிர்வாகிகள் தேர்தல் மையச்சங்க பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கீழ்கண்டவர்கள் புதிய பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| கிளைத்தலைவர் | : | பொறி.தி.உதயகுமார் உதவிசெயற்பொறியாளர் |
| கிளை உபதலைவர் | : | பொறி.பி.கண்ணன், உதவிப்பொறியாளர் |
| கிளை செயலர் | : | பொறி.இரா.வேதநாராயணன், உதவிப்பொறியாளர் |
| கிளை இணைச்செயலர்-1 | : | பொறி.பி.சக்திவேல் உதவிப்பொறியாளர்(மின்) |
| கிளை இணைச்செயலர்-2 | : | பொறி.பி.பாலசுப்ரமணியம், இளம்பொறியாளர் |
| கிளை பொருளாளர் | : | பொறி.எஸ்.பாண்டியன் இளம்பொறியாளர் |

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச்சங்க நிர்வாகிகளை பொறி.ம.பலராமன் உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களும், தர்மபுரி கிளையின் சார்பில் வந்திருந்த பொறி.எஸ்.ஆர்.சுப்ரமணியம் அவர்களும் வாழ்த்தி பேசினார். இறுதியாக பொறி.பி.சக்திவேல் கிளையின் இணைச்செயலர் அவர்கள் நன்றிகூற கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

**தீர்மானங்கள் :**

1. இளம்பொறியாளர் பதவியில் இருந்து உதவிப்பொறியாளர்களாக பதவி பெயர்மாற்றம் பெற்றவர்களுக்கு விரைவில் பணிவரன்முறை பெற்றுத்தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. வழக்கு நிதியாக உறுப்பினர்களிடம் ரூ.1000/- கோருவதற்கு மாறாக பலன்பெறக்கூடிய உறுப்பினர்கள் ரூ.10000/- கோரி பெறலாம் என மையச்சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. 2000 முதல் 2007 வரை இடைப்பட்ட காலத்தில் உதவிப்பொறியாளர்களாக பணியாற்றிவரும் நமது சங்கத்தை சார்ந்த பொறியாளர்கள் விடுத்து இனி வருங்காலத்தில் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் ஏதும் வெளியிடாமல் மையச்சங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.
4. சேலம் இல்லக்காப்பாளராக பொறி.ஏ.முருகேசன் உதவிப்பொறியாளர் அவர்கள் பணியாற்ற தீர்மானிக்கப்படுகிறது.

**தருமபுரி கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை பொதுக்குழு கூட்டம் தருமபுரியில் 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. கிளை தலைவர் ஊ.நகுலன் தலைமை ஏற்றார். உறுப்பினர் அறிமுகம் செய்யப்பட்டது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக பொதுச்செயலாளர் த.முருகேசன் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் ஊ.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளை செயல்பாடுகள் பற்றி கிளை செயலர் பொறியாளர் S.R.சுப்பரமணியன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் 32 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பின்னர் கிளை வரவு செலவு கணக்கினை பொறியாளர்,T. வெங்கடேசன் அவைக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார். பின்னர் மையச்செயல்பாடுகள் பற்றி மேற்கு மண்டல செயலர் உரையாற்றினார். பின்னர் மையச்சங்க செயல்பாடுகள் பற்றி பொதுச்செயலர் D.முருகேசன் நீண்டதொரு உரையாற்றினார். தருமபுரி கிளை உறுப்பினர் வருகை மற்றும் மையச்சங்கத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவை ஏதுமில்லை என பெருமைப்பட்டு தருமபுரி கிளை தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பின்னர் சமீபத்தில் பணி ஓய்வு பெற்ற உறுப்பினர்கள் B.திம்மன் உதவி செயற்பொறியாளர் V.கிருஷ்ணன் இளம்பொறியாளர் மற்றும் பதவி உயர்வுபெற்ற P.நாகராஜ் அவர்களுக்கு மையச்சங்க பொறுப்பாளர்கள் பொன்னாடை போற்றி கவுரவித்தனர் . 2015-16 ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய பொறுப்பாளர்களுக்கு பொதுச்செயலாளர் உறுதிமொழி செய்து வைத்தார்.

| | |
|---|---|
| தலைவர் | பொறி.ஏ.செல்வராஜ், |
| உபதலைவர் | பொறி.ஊ.நகுலன், |
| செயலாளர் | பொறி.எஸ்.கிருஷ்ணன், |
| இணை செயலாளர்-1 | பொறி. எம்.பாலகிருஷ்ணன், |
| இணை செயலாளர்-2 | பொறி. S.R.சுப்பரமணியன், |
| பொருளாளர் | T.வெங்கடேசன், |

பின்னர் இணை செயலாளர் எம்.பாலகிருஷ்ணன் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது. பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

1. அரசு ஆணை 1 உரிய விதி திருத்தம் பெற்று தருமாறு கட்டுக்கொள்ளப்படுகிறது.
2. இளம்பொறியாளரது பதவி மாற்றம் பெற்ற உதவி பொறியாளரை பணிவரன் முறை விரைவில் பெற்று தர கிளை மைய சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. இக்கிளை உறுப்பினர் சேதுமாதவன் அவர்களுக்கு பதவி உயர்வு பெற்றுதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
4. மாற்று சங்கத்தின் அரசு ஆணை 1 மூலம் பதவி உயர்வு பெற்ற உதவி பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வை தடுப்பார்களேயானால் 2007 முதல் பணியமர்த்தப்பட்ட TNPSC உதவி பொறியாளர்களுக்கு துறை மாற்ற முன்மொழிவுக்கு இச்சங்கம் நிறுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.
5. தருமபுரி இந்தியன் வங்கியில் உள்ள சேமிப்பு கணக்கு மற்றும் நிரந்தர வைப்பு கணக்கை புதிய பொருளாளர் மற்றும் செயலாளர் கூட்டாக இயக்க இக்கிளை தீர்மானிக்கப்பட்டது.
6. உதவி செயற்பொறியாளர் காலியிடப்பணிகள் வருடந் தோரும் ஒப்புதல் பெற (Estimate Vacancy) இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.
7. உதவி செயற்பொறியாளர் (மின்) பதவி உயர்வு பட்டியலில் திருமால் வழக்கை மறைமுகமாக நடைமுறை படுத்திய முதன்மை தலைமை பொறியாளரை (பொது) அவர்களின் செயலை இக்கிளை கண்டிக்கிறது.
8. உதவி பொறியாளர் (மின்) பதவி பணிவரன் முறை விரைவில் பெற்று தர கிளை மைய சங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.
9. மையச்சங்கத்தின் நிதிநிலையை உயர்த்த ஒரு கணிசமான தொகை மையச்சங்கத்திற்கு வழங்கிட இக்கிளை உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## மதுரைக் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், மதுரைக் கிளையின் பொதுக்குழு மற்றும் தேர்தல் பொதுக்கூட்டம் 11.07.2015 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கடவுள் வாழ்த்து பாடலுடன் ஆரம்பிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு மதுரைக் கிளையின் தலைவர் பொறி. S.பிரபாகரன், தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக மாநிலத்தலைவர் பொறி.M.பஞ்சவர்ணம், மாநில துணைத்தலைவர் பொறி.C.கணபதி மற்றும் மைய மண்டலச் செயலாளர் பொறி.S.லீலாவதி ஆகியோர் கலந்து கொண்டு, மையச்சங்க செயல்பாடுகள் குறித்தும் கிளைச் சங்கம் செயல்பாடுகள் குறித்து பேசியதுடன், உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தும் பேசினார்கள்.

கிளை பொருளாளர் வரவு செலவு கணக்கினை கூட்டத்தில் தெரியப்படுத்தினார். பின்னர் கிளைச்சங்கம் தேர்தல் நடைபெற்று, கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி.S.பிரபாகரன் |
| துணைத்தலைவர் | : | பொறி.J.சீனிவாசன் |
| செயலாளர் | : | பொறி.V.இரவிச்சந்திரன் |
| இணைச்செயலாளர்1 | : | பொறி.R.சண்முகநாதன் |
| இணைச்செயலாளர்2 | : | பொறி.K.போஸ் |
| பொருளாளர் | : | பொறி.N.சந்திரன் |

கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:-**

1. இத்துறைக்கு தலைமைபொறுப்பில் ஒரு IAS அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்
2. ஒரு பிரிவு அலுவலகத்திற்கு, ஒரு தொழில்நுட்ப உதவியாளர் நியமிக்க நடவடிக்கை எடுக்க.
3. இளம்பொறியாளர்களை தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் (TNPSC) நியமிக்க, நடவடிக்கை எடுக்க,
4. நான்கு வருடங்கள் பணிமுடித்த பட்டயப்பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு பெற்றுத்தர,
5. பணி ஆய்வாளர்களாக பணிபுரியும் உறுப்பினர்களுக்கு விருப்பக் கடிதம் கொடுத்தவர்களுக்கு, இளநிலை வரைதொழில் அலுவலர் (JDO) பதவி உயர்வு பெற்றுத்தர.

இத்தீர்மானங்களை மதுரை கிளைச் சங்கம், மையச் சங்கத்தை நிறைவேற்றி தர தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மதுரைக் கிளையின் இணைச்செயலாளர் பொறி.மு.போஸ் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள் பினபு நாட்டிபண் பாடலுடன் இனிதே முடிவுற்றது.

**சென்னை கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் பொதுக்குழு கூட்டம், 01-08-2015 அன்று காலை 11.00 மணியளவில் சி.ப. சண்முகம் அரங்கில் நடைபெற்றது. கூட்டம் சென்னை கிளையின் தலைவர் பொறி. எஸ். சண்முகானந்தன் தலைமையில், மாநில பொது செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மையசங்க பொறுப்பாளர்கள், கிளை பொறுப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் பொறி. சி.ப. சண்முகம், பொறி. என். வெங்கட்ராமன், பொறி. ஜீ. பாலசுப்பிரமணியன் மற்றும் சென்னை கிளை உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நமது முன்னாள் குடியரசு தலைவர் பாரத ரத்னா டாக்டர். A.P.J. அப்துல் கலாம் அவர்களின் மறைவிற்கு திருவுருவ படத்திற்கு மாலையிட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. மறைந்த நமது கிளை உறுப்பினர் திரு. E.சுரேஷ் இளம்பொறியாளர் அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைவர் பொறி. எஸ். சண்முகானந்தன் தமது உரையில் மறைந்த டாக்டர். A.P.J. அப்துல் கலாம் அவர்கள் நமது நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த நிகழ்வை பெருமையுடன் நினைவுகூர்ந்தார். பொதுப்பணித்துறையில் டிப்ளமோ பொறியாளர்களுக்கு என உள்ள பதவிகளின் காலி பணியிடங்களை நிரப்புவதற்கு மையச்சங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள். மேலும் மறைந்த டாக்டர். A.P.J. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த தினமான அக்டோபர் 15 தினத்தை இளைஞர்கள் எழச்சி நாளாக

அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு சென்னை கிளையின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

பொருளாளர் பொறி. ஏ.மணிமாறன் கிளையின் நிதிநிலை அறிக்கையினை வாசித்து அவையின் ஒப்புதல் பெற்றார்.

பொதுச்செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கும் விபரமாக பதிலளித்தார்கள்.

தியாக செம்மல் பொறி. சி.ப.சண்முகம் அவர்கள், உறுப்பினர்கள் எழுச்சியோடு சங்க கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

பணி ஓய்வு பெற்ற உதவி செயற்பொறியாளர் பொறி. பி. குணதரன் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

நமது மூத்த பொறியாளர் என்.வெங்கட்ராமன் அவர்கள் சென்னை கிளையின் 2015-16 ஆண்டிற்கான பொறுப்பாளர்கள் தேர்தலை நடத்திக் கொடுத்து கீழ்கண்ட பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர் | - | திரு. S. சண்முகானந்தன் |
| 2. | உ.ப.தலைவர் | - | திரு. M.சம்பத் |
| 3. | செயலாளர் | - | திரு. A.மணிமாறன் |
| 4. | கிளை செயலாளர்-I | - | திரு. S.பார்த்தசாரதி |
| 5. | கிளை செயலாளர்-II | - | திருமதி. K.ஆதிசெல்வி |
| 6. | பொருளாளர் | - | திரு. S.K.கருப்புச்சாமி |

திருமதி. ஆதிசெல்வி அவர்கள் நன்றி உரை கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

**தீர்மானங்கள்:**

1. சென்னை கிளையின் வங்கி கணக்கை, புதியதாக தேர்வு செய்யப்பட்ட கிளை செயலாளர் பொறி. திரு. மணிமாறன் மற்றும் பொருளாளர். திரு. கருப்புசாமியும் கூட்டமாக இயக்க பொதுக்குழு ஒப்புதல் அளிக்கிறது.
2. பொதுப்பணித்துறையில் டிப்ளமோ பொறியாளர்களுக்கு உரிய பதவிகளின் காலி பணியிடங்களை மையச்சங்கம் நடவடிக்கை எடுக்க பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

**பட்டயப் பொறியாளர்களுக்காக குரல் கொடுத்த**
**அண்ணல் அப்துல் கலாம் அவர்கள்**

" I don't want any caste system.....

engineers, diploma holders............. O.K.

Engineers are Engineers and

I am also a diploma holder"............

## பாலாறு பிறந்த கதை

12 ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் அவர்கள் பாடிய பெரிய புராணத்தில், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் என்ற பகுதியில் பாலாற்றின் வளத்தை "உயர்ந்த தவமுடைய வசிட்ட முனிவனிடமிருக்கும் காமதேனு சொரிந்த பாலானாது, பெருகும் தீர்த்தமாக உருபட்டு நந்தி மலையினின்றும் இறங்கி, அங்குள்ள முத்துக்களையும் சந்தனம் அகில் முதலானவற்றுடன், மணிகளையும் கொணர்ந்து தாமரைக் குளங்களை நிறைக்குமாறு கீழ் நோக்கி ஓடி வருவது பாலாறு என பாலாற்றின் வளத்தை பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாலாறு கர்நாடக மாநிலத்தில் சிக்பெல்லாபூர் மாவட்டத்தில் உள்ள நந்தி துர்கம் மலை பாலாற்றின் பிறப்பிடம் ஆகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 4851 அடி உயரமுள்ளது நந்தி துர்கம் மலை. பெங்களூரில் இருந்து 60 கீ.மீ.தொலைவில் இருக்கும் மிகச்சிறந்த கோடை வாசஸ்தலம். இந்த பாலாறு ஆனது கர்நாடக மாநிலத்தில் 93 கீ.மீ. பயணித்து, ஆந்திராவில் 33 கீ.மீ. கடந்து தமிழகத்தில் 222 கீ.மீ. என 348 கீ.மீ. தூரம் தடம் பதித்த பாலாறு காஞ்சிபுரம் மாவட்டம் வயலூர் முகத்துவாரத்தை அடைந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

மேலும் பாலற்றின் பிறப்பிடமான நந்தி துர்கத்திலிருந்து பாலாறு, வடபெண்ணை, தென்பெண்ணை, சித்ராவதி, அரக்காவதி மற்றும் பாப்னாகி என ஆறு நதிகளின் பிறப்பிடமும் நந்திதுர்கம்தான்.

**நந்தி துர்க மலையின் சிறப்பு அம்சங்கள்**

நந்தி துர்க மலையில் நெல்லிக்காய் பசவன்னா சிலைக்கு அருகில் பிரம்மாசிரமம்

அமைந்துள்ளது. இதற்கு சற்று தூரத்தில் தான் பாலாற்றின் நதிமூலம் அமைந்துள்ளது. இந்த நதி மூலத்திற்கு கல்மண்டபம் கட்டியுள்ளவர்கள்.

நந்தி துர்க மலை சிறந்த கோடை வாசஸ்தலங்களில் ஒன்று.

முன்னொரு காலத்தில் நந்தி துர்க மலையை குஷ்மந்தகிரி என்றும் அழைத்துள்ளனர்.

சோழர்கள் ஆட்சி காலத்தில் நந்திதுர்க மலையை அனந்தகிரி என்று அழைத்துள்ளனர்.

சோழர்கள் ஆட்சி காலத்திற்கு பிறகு அனந்தகிரி என்று அழைக்கப்பட்ட நந்தி துர்க மலை நந்தி துர்கமாக பெயர் மாறியது.

அடிவாரத்தில் இருந்து மலையை நோக்கிய நந்தி சிலைதான் நந்தி துர்கத்திற்கு செல்லும் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

இப்படி சிறப்பு வாய்ந்த நந்தி துர்கம் ஆனது 1770 ல் மராத்திய மன்னர் மாதவராவிடம் இருந்து திப்பு சுல்தான் மன்னர் வாங்கி அம்மலையை கோடை கால ஓய்வுக்கும், வேட்டையாடும் இடமாக திப்பு சுல்தான் மன்னர் பயன்படுத்தி வந்தார்.

திப்பு சுல்தான் மன்னர் நந்தி துர்கத்தில் உள்ள உயர்ந்த மலைகளில் கோட்டைகளை கட்டியும், நந்தி துர்கத்தை தனது ராணுவ பலத்தை நிருபிக்கும் கோட்டையாகவும் மாற்றியதோடு, நந்தி துர்க மலையின் உச்சியில் திப்பு சுல்தான் ஓய்வெடுக்க சிறிய மாளிகை ஒன்றும் அமைத்துள்ளார்.

மலையின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள மாளிகையானது மாளிகையில் இருந்து கொண்டு மலையின் அடிவாரத்தில் வருவபர்களை பார்க்க கூடிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் N. முருகேசன் உதவி பொறியாளர் அவர்களின் தாயார் N. தெய்வாணை அம்மாள் அவர்கள் 07.07.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் K.ராமர் உதவி பொறியாளர் அவர்களின் K. கண்ணம்மாள் அவர்கள் 29.06.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி- தூத்துக்குடி கிளை உறுப்பினர் S.வேலானந்தராஜ் உதவி செயற் பொறியாளர் அவர்களின் தகப்பனார் V. சபாபதி அவர்கள் 26.06.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை செயலாளர் பொறியாளர் மு.ஆதிமூலம் உதவி பொறியாளர் அவர்களின் மாமனார் S.முத்துராஜ் அவர்கள் 06.07.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் V.M. வினோத்குமார் உதவி பொறியாளர் அவர்களின் அப்பா மாசிலாமணி 15.07.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் V.முருகேசன் இளம்பொறியாளர் அவர்களின் தாயார் ராஜம்மாள் அவர்கள் 11.06.2015 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## ஜூலை 2015 மாத பொறியாளர் இதழில் இருந்து

மேற்படி பதவி உயர்வின் மூலம் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நமது சங்கத்தால் விட்டு கொடுக்கப்பட்ட, தொலைக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் உரிமைகள் தற்பொழுது மீட்டெடுக்கப்பட்டுள்ளது, இதனை தக்கவைக்க வேண்டும். 2007 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு "எவ்வித இடைச்செருகலின்றி" அடுத்த பதவி உயர்வு பட்டியல் பெறுவதே நமது இலட்சியம் என உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மணந்தனர் வாழ்த்துகிறோம்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர், பொறி.ஆ.சிவராமன், இளம்பொறியாளர் அவர்களது புதல்வன் ஸ்ரீ.கிஷோர், செல்வி வு.கஸ்தூரி ஆகியோரது திருமணம் கடந்த 29.06.2015 அன்று சேலம் மாநகரில் நடைபெற்றது. மணமக்கள் எல்லா வளமும் பெற்று நீடுழி வாழ தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

## நன்கொடை

கடந்த 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற நமது சங்கத்தின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமான"2008-ம் ஆண்டு தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற 29 நபர்கள் அரசாணை எண்.1 சம்பந்தமான வழக்குகளை எதிர்கொள்ள ரூ.15,000/- சிறப்பு வழக்கு நிதியாக தரவேண்டும் " என்பதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பொறியாளர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளனர்.

1. தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை உறுப்பினர் பொறி.M.கணேசன் ரூ.15,000/-
2. தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறி.A.முருகேசன் ரூ.15,000/-

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை உறுப்பினர், பொறி.G.விஜயன், உதவிசெயற்பொறியாளர் சங்க வளர்ச்சி நிதி நன்கொடையாக ரூ.1000/- வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர், T.நாகரெத்தினம் இளம்பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்திற்காக ரூ.1001/- நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் என்.வேணுகோபாலன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தஞ்சைக்கிளையின் இல்ல அறை எண் 103ஐ மேம்படுத்த ரூ: 3000/- வழங்கியதற்கு தமிழ்நாடு பொறியியல் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## வாழ்த்துக்கள்



| | |
|---|---|
| Language | 99 |
| English | 99 |
| Maths | 100 |
| Science (Theory + Practical) | 100 |
| Social Science | 99 |
| Total | 497 |



தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் பொறியாளர் திரு.ஞ.திருவேங்கிடம் அவர்களின் மகள் வு. கீதாலட்சுமி பத்தாம் வகுப்பு தேர்வில் 497 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாமிடமும், காஞ்சிபுரம் ஞ.ஞ.மு.ஏ. மெட்ரிக் பள்ளியில் முதலிடமும் பெற்றுள்ளார். அவருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் வாழ்த்துக்களை தெரிவிக்கிறது.

# அஞ்சலி

## பிறப்பும் இறப்பும்

வாழ்க்கையில் எல்லாமே கடந்து போகும். பிறப்பும், இறப்பும் அதிலடங்கும் என்பதுதான் அப்துல்கலாமின் வாக்கு. "பிறப்பு என்பது ஒரு நிகழ்வாக இருக்கலாம். ஆனால் மரணம் ஒரு சரித்திரமாக அமைய வேண்டும்."

தன் முடிவை முன்கூட்டியே சொல்லிய தீர்க்கதரிசி!

**சொந்த பந்தங்கள்**

தமிழ்நாட்டின் கடைகோடி இராமேஸ்வரம் மீனவர் குப்பத்தில் பிறந்து, ஏழ்மையில் எழுந்து, நேர்மையில் உயர்ந்து இந்நாட்டின் குடியரசுத்தலைவரானார். திருமணமாகாத பிரம்மச்சாரி. ஆனாலும், அவரைச்சுற்றி நிறைய சொந்த பந்தங்களுண்டு. ஒருமுறை அனைவரும் இராமேஸ்வரத்தில் ரயிலேறி டெல்லிக்கும் போனார்கள். ஜனாதிபதி மாளிகையில் தடபுடலான மூன்று நாட்கள் விருந்து. டெல்லியை முதன் முதலாக சுற்றிப்பார்த்தபோது மூக்கில் விரலை வைத்தார்கள்.

எல்லாவற்றையும் சிறப்பாக ஏற்பாடு செய்து கொடுத்த ஜனாதிபதி மாளிகையின் அதிகாரியை அழைத்து உணர்வு மேலிட நன்றி கூறினார். ஒரு "அயிட்டம்" விடாமல் என்ன செலவாயிற்று என்று கேட்டறிந்தார். அதிகாரியும் ஒரு வெள்ளைத்தாளில் பட்டியலிட்டுக் கொடுத்தார். ஒட்டுமொத்த செலவை தன் சொந்தப் பணத்தைக் கொடுத்து கணக்கை செட்டில் செய்தார். இப்படி ஒரு விந்தை மனிதரை நாம் கண்டதில்லை.

**இரண்டு சூட்-கேஸ்கள்?**

தன்பதவிக்காலம் முடிந்து ஜனாதிபதி மாளிகையை காலி செய்து விட்டு வெளியேறும்போது கையில் இரண்டு சூட்-கேஸ்கள் மட்டுமே! தனக்கு மிகவும் பிடித்தமான கோட்-சூட், உள்ளாடைகள் அடங்கிய சூட்-கேஸ் ஒன்று! மற்றொன்றில்? முழுமையாகப் படித்து முடித்திருந்தாலும் அவைகள் எப்போதும் தன்னுடன் இருக்கவேண்டுமென்று விரும்பிய நூல்கள். இப்படி ஒரு சாமானிய முதல் குடிமகன்.

**ஓய்வின்றி உழையுங்கள்**

மனிதராய்ப் பிறந்த எவருக்கும் ஒரு நாள் மரணம் நிச்சயமுண்டு. அது எனக்கு நேரும் போது தேசிய விடுமுறை விட்டு வேலை நாளை வீணடிக்காதீர்கள். அன்று ஒருமணி நேரம் கூடுதலாக உழையுங்கள் என்றார். அவரின் வேண்டுகோளை ISRO நிறுவனம் நடத்திக்காட்டியது. மத்திய அரசு தேசியக்கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டது.

*நெக்குருகி நெகிழ்ந்து இதனைத் தொகுத்தவர், அப்துல் கலாம் பயின்ற தொடக்கப்பள்ளியில் இராமேஸ்வரத்தில் 1950-52ல் படித்தவர். (ஆர்.கே.எஸ்)*



-பொறியாளர் ஆர்.கே.சுந்தரம்
தேர்வு நிலை உதவிசெயற்பொறியாளர்
(பணி நிறைவு)
வடபழநி - 600 026
தொலைபேசி: 2362 3396



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்! வணக்கம்!

நிகழும் மங்களகரமான மன்மத வருடம் 1191-ஆம் ஆண்டு ஆவணி 4-ம் நாள் (21.08.2015) வெள்ளிக்கிழமை, சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று காலை 9.15 மணிக்கு மேல் 10.15 மணிக்ககம் உள்ள சுபவேளையில்

ராணிப்பேட்டை, BHEL டவுண்ஷிப்
தெய்வத்திரு அணஞ்சபெருமாள் - தெய்வத்திருமதி.ராஜம் மற்றும்
தெய்வத்திரு. ராமச்சந்திரன் - தெய்வத்திருமதி. தங்கம்
ஆகியோரின் பௌத்திரியும், எங்கள் புதல்வியுமான

செயபாக்கியவதி **A. பிரதீபா, M.C.A.,**

வடசேரி பள்ளிக்கூடத்தெரு,
தெய்வத்திரு.K.S. அருணாசலம் - தெய்வத்திருமதி. பகவதியம்மாள் ஆகியோரின் பேரனும்,
கிருஷ்ணன்கோவில், மேலத்தெரு,
K.S.நகர், தெய்வத்திரு. A.S.சுப்ரமணியன் - திருமதி.R. சாந்தி
ஆகியோரின் புதல்வனுமான

சிரஞ்சீவி **S.சிவா, M.C.A.,**

(Software Engineer, ACCENTURE, Chennai)

இவர்கள் திருமணம் பெரியோர்கள்ால் நிச்சயிக்கப்பட்டு, வடசேரி, அசம்புரோடு, **ஸ்ரீகாமாட்சி அம்மன் கோவிலில்** வைத்து நடைபெறும் திருமணத்திற்கும் அதன்பின் C.B.H.ரோடு, **குமார் திருமண மண்டபத்தில்** வைத்து நடைபெறும் விருந்து உபசரணைகளுக்கும் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கிறோம்.

**தங்கள் அன்புள்ள**

**A. அண்ணாதுரை**
**Master Technician, BHEL.**
**T. நாகரெத்தினம்**
**Junior Engineer, P.W.D., Chennai.**

B.H.E.L. டவுண்ஷிப்
ராணிப்பேட்டை
94430 37901

வரவேற்பு:
மாலை 5.00 முதல் 7.00 மணி வரை

தருமபுரி கிளை பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்கும் காட்சி



சேலம் கிளை பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்கும் காட்சி



சென்னை கிளை பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்கும் காட்சி



**சங்க அலுவலகத்தில் முன்னாள் இந்திய குடியரசு தலைவர்**
**மேதகு A.P.J. அப்துல் கலாம் அவர்களின் மறைவிற்கு அஞ்சலி**






**மதுரை கிளை பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்கும் காட்சி**



# நெஞ்சில் நிறைந்த நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள்





Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/2015-17Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

August 2015

தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

# மாநில பொதுக்குழுக் கூட்டம் அறிவிப்பு

வருகிற ஆகஸ்டு திங்கள் 8 மற்றும் 9 தேதிகளில் நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் தெற்கு மண்டலம் சார்பில் திருநெல்வேலியில் நடைபெற உள்ளது.

இடம் : மே பிளவர் ஹால்
லாரா பாரடைஸ் இன்
புதிய பேருந்து நிலையம் எதிரில்
திருநெல்வேலி - 627 007.

பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்தப் பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொறி. எஸ். கண்ணன்
செயலாளர் அமைப்பு & சட்டம்

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 03-08-2015
Postng on 05-08-2015

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. K. KAMALDEEN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312